For Private Circulation Only

ஜுலை 2011 மலர் 4 இதழ் 4

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY



## சென்னை

### இந்திய ஸ்காலர்ஷிப் பயிற்சி நிகழ்ச்சி (ஏப்ரல் 16 - 24)

மாஸ்டர், இந்திய ஸ்காலர்ஷிப் பயிற்சி நிகழ்ச்சியின் இரண்டு நிகழ்வுகளிலும், தொடக்க விழா மற்றும் முடிவு விழாவில் கலந்துகொண்டு, உரையாற்றினார். துவக்க உரையில் பேசிய மாஸ்டர், "சகஜ மார்க்க கற்பித்தலில் மிக முக்கியமான பகுதியாக பிரணாஹுதி இருக்கின்றது. என்னை நம்புங்கள், பிரணாஹுதி என்பது ஒரு பயிற்சிமுறை, இது உங்களுக்கு வாழ்க்கையைக் கொடுக்கின்ற ஒரு பயிற்சிமுறை, 'பிராணஸ்ய பிராணா'. மேலும், இது குருவின் கருணையையும், ஆற்றலையும் நமக்குள் செலுத்துகின்ற முறையாகும்" என்று கூறினார். முடிவு நிகழ்வில், இங்கே கேட்டறிந்ததைப் புரிந்துகொண்டு, நடைமுறை தினசரி வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டியதன் தேவையை வலியுறுத்தினார். மாஸ்டர், பயிற்சியின் அனைத்து நிகழ்வுகளையும் சி.சி.டி.வி மூலம் கண்டு களித்தார்.

### பாபூஜி மகாசமாதி நாள்: ஏப்ரல் 19, 2011

மாஸ்டர் அதிகாலையில் எழுந்து, காலை சிற்றுண்டி முன்பு வரை, பிரிபெக்ட்களுக்கு சிட்டிங் வழங்கியும், தனது இ-மெயில்களைப் பார்த்துக் கொண்டும், பதிலளித்துக் கொண்டும் இருந்தார். காலை சத்சங்கத்தை வழங்க வேண்டுமென்ற திட்டத்தில் அவர் இல்லை. ஆனால், ஆசிரமம் முழுவதும், மாஸ்டர் காலை சத்சங்கத்தை வழங்குகிறார் என்ற செய்தி பரவியது. மாஸ்டர் இந்த செய்தியைக் கேட்டு ஆச்சரியப்பட்டார். பின்பு, சத்சங்கத்தை வழங்க முடிவு செய்து, தியான மண்டபத்திற்கு வந்துவிட்டார். ஆனால், அதுவரை மாலைகள் தயாராகி வரவில்லை. மாலைகள் வரும் வரை காத்திருக்க முடிவு செய்தார். 15 நிமிடங்களுக்கு மேலாக, தியான மேடையின் படியிலேயே அமர்ந்திருந்து, மாலைகள் வந்த பின்னர்தான், படியில் ஏறி தியான மேடைக்குச் சென்று, லாலாஜி மற்றும் பாபூஜி படங்களுக்கு மாலைகள் அணிவித்த பிறகு, சத்சங்கம் வழங்கினார்.

### பாபூஜி மகராஜ் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

மூன்று நாள் நிகழ்ச்சியாக, ஏப்ரல் 29 முதல் மே 1 வரை நடைபெற்றது. மூன்று நாட்களிலும், காலை 7.30 மணிக்கும், மாலை 5.00 மணிக்கும் சத்சங்கம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. 4000 - க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்து கொண்ட இவ்விழாவில், மூன்று நாட்களிலுமே, மாஸ்டர் காலை சத்சங்கத்தை வழங்கினார். ஒவ்வொரு சத்சங்கமும் 1 மணி நேரம் 15 நிமிடம் வரை நீடித்தது. மே 1 - ந்தேதி காலையில் வழங்கப்பட்ட விழாவின் கடைசி சத்சங்கமானது, 1 மணி நேரம் 25 நிமிடங்கள் வரை நீடித்தது.

புனிதமான நாளான ஏப்ரல் 30 அன்று, மாஸ்டர் எட்டு திருமணங்களை நடத்தி வைத்தார். பின்னர், இரண்டு சகோதரிகள் பஜன் பாடினர். மாஸ்டர் சில புத்தகங்களையும், ஆடியோ-வீடியோ சி.டி க்களையும் வெளியிட்டார். மாஸ்டருடைய பேரன் பார்கவ், மாஸ்டரின் பிறந்தநாள் விழாவில் வழங்கவிருக்கும், வரையறுக்கப்பட்ட அளவிலான, மாஸ்டரின் புகைப்படங்களுக்கான முன்பதிவினைப் பற்றி அறிவித்தார். கிச்சன் அருகில் இருக்கும் முற்றத்தில், காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த அந்த முன்பதிவுக்குரிய படங்களை மாஸ்டர் பார்த்தார். மாஸ்டர் ஆசிரமத்தை சுற்றி வந்தபொழுது, அழகான சிறு தூறலும் இணைந்தே இருந்தது.

மாலை 6.30 மணிக்கு, ஹைதராபாத் மைய அப்யாசிகளால் அருமையான நாடகம் ஒன்று வழங்கப்பட்டது. ஆன்மீகத்தைத் தேடும் ஒருவர், தன் பயணத்தில் தேர்ந்தெடுக்கவேண்டியவை என்ன என்பதையும், சந்தேகம், முன்கணிப்பு, பயம், கோபம் மற்றும் சோம்பேறித்தனம் போன்றவை தடையாக இருக்கின்றது என்பதையும், உயர்ந்த குணங்களான நம்பிக்கை, அன்பு, பொறுமை, ஒழுக்கம் மற்றும் சங்கல்ப சக்தி மூலம் மீண்டு வரமுடியும் என்பதையும் விவரிக்கும் வகையில் நாடகம் சித்தரிக்கப்பட்டிருந்தது. அந்த நாடகம், அக்குழுவால், ஆன்மீக சூழலில் சிறப்பாக அரங்கேற்றப்பட்டது. அது அங்கிருந்த அனைவரின் இதயத்தையும் தொட்டது. பின்னர், மாஸ்டர் நாடகத்தில் பங்கு பெற்ற அனைவரையும், காட்டேஜில் சந்தித்தார். மே 1-ந்தேதி மாலையில், சென்னை மைய இளைஞர்களால் புத்தரின் வாழ்க்கையைப் பற்றிய நாடகம் வழங்கப்பட்டது. இந்த நாடகத்தையும் மாஸ்டர் சி.சி.டி.வி மூலம் கண்டுகளித்தார்.

மூன்று நாள் விழாவானது, மே 1-ந்தேதி மாலையுடன் முடிவடைந்தது. ஆனால், மாஸ்டரால் செய்யப்பட்ட ஆன்மீகப் பணியானது, நம் அனைவரின் இதயங்களிலும் நிலைத்து வளர்ச்சியடையும். மாஸ்டர் காயத்ரிக்கு சென்று, ஒரு நாள் மட்டுமே இருந்தார். பின்னர், மே 3-ந்தேதி சாலை வழியாக பெங்களூருக்கு சென்றார்.






ஜூலை 2011 மலர் 4 இதழ் 4
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## அடிஸெஸ் கருத்தரங்கு

பெங்களூரு, 2011 மே 3 முதல்14 வரை



கடந்த முப்பது வருடங்களில், நமது மிஷனானது, மிக வேகமாக வளர்ந்துள்ளது. சகஜ மார்க்கக் கொள்கைகள் மற்றும் பயிற்சியின் தொன்மை வாய்ந்த தூய்மையைப் பாதுகாத்து, தொடர்ந்து சிறப்பாக சேவை செய்ய ஏதுவாக, மிஷனின் நிர்வாக அமைப்பை, மாஸ்டர் சீர்திருத்த முனைந்து, அதனைத் தொடங்கி வைத்தார்.

நிர்வாக அமைப்பை மாற்றி அமைக்க, இன்றைய உலகின் நிர்வாக சிந்தனைவாதிகளில் முன்னணியில் இருப்பவரான டாக்டர். இச்சாக் அடிஸெஸ் என்பவருக்கு, மாஸ்டர் அழைப்பு விடுத்தார். சகஜ மார்க்கத்தின் பல்வெறு பிரிவுகளின் பிரதிநிதிகளாக, 25 அப்யாசிகளைக் கொண்ட ஒரு குழு தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பரம்தாமில் கூடி, மாஸ்டர் மற்றும் டாக்டர் அடிஸெஸ் வழிகாட்டுதலில், தீவிரமாக ஆழ்ந்து ஆலோசித்தனர்.

அடிஸெஸின் செயல் முறையானது ஏற்றுக்கொள்ளப்பட்டு, SRCM மற்றும் அதன் சகோதர அமைப்புக்களின் எதிர்கால நிர்வாக அமைப்புக்குத் தகுந்தாற்போல் பயன்படுத்திக்கொள்ளப் பட்டது. புதிய நிர்வாக அமைப்பு, கீழ்க்கண்ட எண்ணங்களைச் செயலாக்க வடிவமைக்கப்பட்டது.

- ஆன்மீகத்தைத் தேடுபவர்களுக்கு நாம் வழங்கும் ஆன்மீக ஆதரவை வலுப்படுத்துதல்,
- சேவையின் உயிரோட்டத்தைப் பாதுகாத்தல் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்,
- இறுதிவரை ஆன்மீக நோக்கத்திற்குத் தடையில்லாத வகையில், சீரான அமைப்பினை உருவாக்குதல், மற்றும் இறுதியாக,
- மாஸ்டருக்கு அதிகரிக்கும் நிர்வாக பளுவை குறைத்தல்.

ஆழ்ந்து ஆராய்ந்ததில் வந்த மூன்று முக்கிய விளைவுகள்:

சகஜ மார்க்கத்தை எதிர்காலத்திற்கு கொண்டு செல்லும், ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்குதல், மற்றும் மாஸ்டருடைய மிஷனைப் பூர்த்திசெய்ய அவருக்கு உதவும் வகையில், உலகளாவிய சேவைக்குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்தல்.

ஆழ்ந்து சிந்தித்த எண்ணங்களின் சாராம்சத்தைக் கொண்ட, பங்கேற்றவர்கள் மற்றும் மாஸ்டர் கையெழுத்திட்ட, சகஜ மார்க்க சேவையின் ஒப்பந்தம் ஒன்றைத் தயாரித்தல்.

அன்பு மற்றும் சேவைக்காக மீண்டும் பொறுப்பேற்றுக் கொள்ளுதல். மாஸ்டர், "அன்பு நம்முடைய இசையாக இருக்கிறது, அது நமது செயல்பாடாக இருக்கிறது, அது நமது பிரார்த்தனையாக இருக்கிறது." என்று கூறினார். சேவையைப் பற்றி கூறுகையில் "நம் சமுதாய கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட வேண்டுமெனில், தன்னலமற்ற சேவையால் மட்டுமே சாத்தியமாகும்." என்று கூறினார்.

இந்த குழுதான், மிஷன் மற்றும் அதன் சகோதர அமைப்புகளின் அனைத்து செயல்பாடுகளுக்கும், மாஸ்டரின் வழிகாட்டுதல் மற்றும் விதிமுறைகளின்படி செயல்படும், பொறுப்புடைய குழுவாக இருக்கப் போகிறது.

## பெங்களூரு

மாஸ்டர், நாட்றம்பள்ளியிலிருந்து 2.15 மணியளவில் கிளம்பி, பெங்களூரு க்ரெஸ்டுக்கு மாலை 5.00 மணியளவில் சென்றடைந்தார். அவர் பிரசாதம் வழங்கி சிறிது நேரம் களைப்பைப் போக்கிக்கொண்டு, உடனே கோல்ப் வண்டியில் க்ரெஸ்ட் மையத்தை சுற்றி வந்து, அங்கு நடைபெறக்கூடிய, புதிய கட்டிட வளாக கட்டுமானப் பணியை பார்வையிட்டார். அதன் பின்னர் மாஸ்டர் சத்சங்கம் வழங்கினார்.

அடுத்த நாள் காலை சத்சங்கம் முடித்து, கோல்ப் காரில் மாஸ்டர் சுற்றி வந்தபொழுது, வழியில் வரிசையாக நின்று கொண்டிருந்த அப்யாசிகளிடம் பேசிக்கொண்டே சென்றார். மாஸ்டர் பொறுமையாக ஒரு மணி நேரத்திற்கும் மேலாக செலவிட்டு, அப்யாசிகளிடம் பேசிச் சென்றார். சிறிது நேரம் கழித்து மாஸ்டர் நகரத்திற்கு சென்றார். பரம் தாமில் உள்ள ஆசிரமத்தில், மே 5-ம் தேதி நடைபெறவிருக்கும் அடிஸெஸ் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைப் பார்வையிட்டார். வேலையின் தரத்தையும், அனைத்து ஏற்பாடுகளையும் கண்டு மாஸ்டர் மகிழ்ச்சியடைந்ததுடன், பாராட்டியும் சென்றார்.



## உலகளாவிய சேவை குழு

| | |
|---|---|
| பி.ஆர். கிருஷ்ணா | ஆன்மீக நிகழ்ச்சி மேம்பாடு |
| சஞ்சய் பாட்டியா | தலைவர், லாலாஜி மெமோரியல் எஜூகேஷனல் சொசைட்டி |
| சந்தோஷ் ஸ்ரீனிவாசன் | ஆன்மீக பயிற்சி வழங்குதல் |
| ரிஷப் கோத்தாரி | அங்கத்தினர் சேவை |
| சக் ஸ்ரீபிரசாத் | தொடர்ச்சியான முன்னேற்றம் |
| ராஜேந்திரசிங் ராத்தோட் | ஆன்மீக சேவை, இந்தியா |
| பவுல் எம். ஜூல் | ஆன்மீக சேவை, மேற்கு |
| நிதின் கோவிலா | ஆன்மீக சேவை, கிழக்கு |
| வில்லியம் வேகாட் | ஆன்மீக சேவை, அமெரிக்கா |
| என்.எச். நாகராஜா | ஆன்மீக சேவை, சிஐஎச் |
| சரத் ஹெக்டே | சமுதாய மேம்பாடு |
| சுதிர் மார்வாஹா | உலகளாவிய நிலையான சொத்திற்கு உதவுதல் |
| சந்தோஷ் காஞ்சி | உலகளாவிய செயல்பாட்டு உதவி |
| கம்லேஷ் பட்டேல் | மதிப்பிடுதல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல் |


ஈரோட்


மலம்புழா

## தமிழ்நாட்டினூடாக பயணித்தல்

மே 14-ம் தேதி, மாஸ்டர் பெங்களூரிலிருந்து கிருஷ்ணகிரி ஆசிரமத்தைச் சென்றடைந்தார். அவர், பெங்களூரு மற்றும் அதன் அருகாமையிலுள்ள மையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். சத்சங்கத்திற்கு பிறகு மாஸ்டர் குதூகலமாக இருந்தார். சில அப்யாசிகளுடன் இலகுவான இதயத்துடன் கேலியாகப் பேசிக்கொண்டிருந்தார். பிறகு அவர் ஈரோட்டிற்கு கிளம்பிச் சென்றார்.

மாஸ்டர் மதியம் 12:30 மணியளவில், ஈரோட்டைச் சென்றடைந்தார். அவர் பயணக் களைப்பில் இருந்தபோதிலும், அப்யாசிகளைக் கண்டவுடன் குதூகலகமும் மகிழ்ச்சியுமடைந்தார். அவர் சிறிது நேரம் ஓய்வெடுத்த பின்னர், மாலை 4 மணிக்கு உணவருந்தும் அறையைத் திறந்து வைத்துவிட்டு, அங்கு கூடியிருந்த சுமார் 1000 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். மாஸ்டர், இந்த வருடம் 12-ம் வகுப்புத் தேர்வுகள் எழுதி முடித்தவர்களை சத்சங்கத்தில் கலந்துகொண்டு பயிற்சியைத் துவங்க அனுமதியளித்தார். பின்னர் அவர், ஆசிரமத்தின் மேம்பாட்டைப் பற்றி, மையப் பொறுப்பாளர் மற்றும் பிரிசெப்டர்களுடன் கலந்துரையாடினார். பின்னர் அனைத்து வாகனங்களும் மாலை 6 மணியளவில் திருப்பூர் DJ பூங்காவைச் சென்றடைந்தன.

15-ம் தேதி காலையில், ஜூலை 24 பிறந்தநாள் விழாவிற்கான, தற்காலிக தியான மண்டபத்திற்கு நிலைநாட்டினார். காலை 6:40 மணிக்கு, புதிதாக கட்டப்பட்ட, பொதுவான தங்கும் அறையை அவர் திறந்து வைத்தார். பரந்து விரிந்த அந்த கட்டிடத்தை அவர் சுற்றிப் பார்த்தார். திறப்பு விழாவிற்காக, அங்கிருந்த பாபூஜியின் பின்னணித்திரையைக் கண்டு வியந்தார். பின்னர் அவர் காலை 7 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். அப்போது, நாம் சத்சங்கத்திற்கு சற்று நேரம் முன்பே தயாராக வேண்டும் என்று அனைவருக்கும் நினைவுபடுத்தினார். பின்னர், அந்த தங்குமறைக்கு 'அமைதி நிலையம்' (அமைதியின் இருப்பிடம்) என்று பெயரிட்டார். அத்தருணத்தில், கேரளாவைச் சேர்ந்த சுமார் 600 பேரைச் சேர்த்து 3000-க்கும் மேற்பட்ட அப்யாசிகள் இருந்தனர்.

ஒரு சிறிய ஓய்விற்குப் பின்னர், அருகாமையிலுள்ள மையங்களுக்கான தனது பயணச்செயலை திட்டமிட்டபடி குதூகலமாக இருந்தார். அவர், சென்னை LMOIS-லிருந்து படித்து முடித்து வெளியேறும் குழந்தைகளுக்கான நினைவு இதழுக்காக, ஒரு செய்தியை எழுதினார். மாஸ்டர் தாராளமாகக் கொடுக்கும் மனநிலையில் இருந்தார். இந்த வயதில், அத்தகைய அன்பும் சுயசிந்தனையின்றி தன்னுடைய உடல்நலத்தையோ அல்லது சொந்தத் தேவைகளையோ பற்றி பொருட்படுத்தாமல், அவர் கலந்துரையாடுவதையும், வேலை செய்வதையும் பார்க்கும்போது பிரமிப்பாக இருந்தது.

மாலையில், ஜூலை விழாவிற்கான ஏற்பாடுகளைக் காண, DJ பூங்காவைச் சுற்றிப் பார்த்தார். Aram Dorm-ஐ பார்த்துவிட்டு, புதிதாக மருத்துவ மையம் கட்டப்படவிருக்கும் இடத்தைப் பார்வையிட்டார். மருத்துவ மையத்தின் திட்டம், மாஸ்டரிடம் காண்பிக்கப்பட்டது. அவர் அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு, "இது என்னிடமே இருக்கட்டும்" என்றார். பின்னர் அவர் அங்கே கூடியிருந்த, 30 நிமிடங்களுக்கும் மேலாக, அமைதியாக காத்துக்கொண்டிருந்த அப்யாசிகளுக்கு, ஓர் ஆழ்ந்த ஈர்க்கும் சூழலில், சத்சங்கம் நடத்தினார்.

மாஸ்டர் 16-ம் தேதி காலை 7 மணிக்கு, மலம்புழா சிற்றோய்வு மையத்திற்கு புறப்பட்டுச் சென்றார். அவர் காட்டேஜ் இணைப்பறையைத் திறந்துவைத்தார். காலைச் சிற்றுண்டியை உட்கொண்டார். அப்யாசிகளுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினார். பின்னர், அங்கு காத்துக்கொண்டிருந்த சுமார் 500 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். மதியம் 12:45 மணிக்கு கோயம்புத்தூருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அவர், நாச்சிபாளையம் ஆசிரமத்தைச் சென்றடைந்து, தாமதமாக மதிய உணவு அருந்திவிட்டு, சிறிது நேரம் ஓய்வெடுத்தார். கூடியிருந்த சுமார் 600 அப்யாசிகளுக்கு, மாலை 4 மணிக்கு சத்சங்கம் நடத்திய பின்னர், மாஸ்டர் திருப்பூர் DJ பூங்காவிற்கு, இரவு சுமார் 8:30 மணிக்குத் திரும்பினார்.

17-ம் தேதி மதியம், திருப்பூரிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவிலுள்ள, காங்கேயத்திற்குச் சென்றார். அந்தச் சிறிய ஆசிரமத்தில், மாஸ்டர் காட்டேஜையும் புதிய தியான

"ஒரு வளரும் செடிக்கு நீர் எப்படியோ அப்படித்தான் குழந்தைகளுக்கு கல்வியுமாகும்.

சூரிய ஒளி - விவேகம் - இதுதான் செடியை, மலர்ந்து அதன் நறுமணத்தை பரப்பும் வகையில் அதன் முழு வளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.

அன்புதான் அந்த சூரியனாகும்!!"


திருப்பூர்


காங்கேயம்



திண்டுக்கல்



திருச்சி

மண்டபத்தையும் திறந்துவைக்கையில், பேரெண்ணிக்கையிலான அன்பார்ந்த நெஞ்சங்கள் பிரசன்னமாகியிருந்தன. மாஸ்டர் அமர்ந்தபின், அப்யாசிகள் மண்டபத்திற்குள் நுழைந்தனர். அந்த முழுக் கூட்டமும் வெகு அமைதியாக இருந்தது. மாஸ்டர் அப்யாசிகளிடம் தமிழில், "இந்த அமைதிக்கு என்ன காரணமோ?" என்று கேட்டார். சில நொடிகளுக்குப் பிறகு மாஸ்டர் தாமாகவே, "கொஞ்சம் முன்னேற்றம் ஆகியிருகிறது என்று அர்த்தம்" என்று பதிலும் சொன்னார். மாலை 4:30 மணிக்கு, மாஸ்டர் அங்கிருந்த 1700 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். பின்னர், மாலை 6:30 மணி அளவில், DJ பூங்காவிற்குத் திரும்பினார்.

18-ம் தேதி காலை, மாஸ்டர் DJ பூங்காவிலிருந்து புறப்பட்டு, காலை 8:30 மணிக்கு திண்டுக்கல் ஆசிரமத்தைச் சென்றடைந்தார். அங்கு அவர், தியான மண்டபத்தை திறந்துவைத்து, அதற்கு 'தயா ஆசிரமம்' என்று பெயரிட்டார். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு அவர், இத்திறப்பு விழாவிற்காக வந்திருந்த 250 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார்.

11 மணி அளவில், மாஸ்டர் திண்டுக்கல்லைவிட்டு திருச்சிக்கு புறப்பட்டார். மாஸ்டரது கார் நகர ஆரம்பித்ததும், ஒரு அப்யாசி சீட் பெல்டை அணிந்துகொள்ள நினைவுபடுத்தினார். அதற்கு மாஸ்டர் களிப்புடன் அவரிடம், "உங்கள் முகங்களைப் பார்த்ததும், நான் சீட் பெல்டை அணிய மறந்துவிட்டேன்" என்றார். மாஸ்டரது வார்த்தைகள், அப்யாசிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியதோடு இலேசாகவும் உணர வைத்தது.

மாஸ்டர் 1 மணிக்கு திருச்சியைச் சென்றடைந்தார். இடைவிடாத பயணத்திற்குப் பிறகு அவர், ஓய்வெடுக்கவும் அலுவலக விஷயங்களை கவனிக்கவும் நேரத்தை ஒதுக்கிக்கொண்டார். மாலை வேளைகளில், சில சமயங்களில் அவர் திறந்தவெளியில் படம் பார்த்தார். ஞாயிற்றுக்கிழமை சத்சங்கத்திற்காக ஆசிரமம் வந்தார். ஒரு அப்யாசி தனது பிரார்த்தனைக்கு எவ்வாறு வியத்தகு வகையில் பதிலளிக்கப்பட்டது என்பதுபற்றிய ஒரு நிகழ்வைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார். அப்போது மாஸ்டர், "யார் பிரார்த்திக்கிறார்கள் என்பதை விடுத்து, பிரார்த்தனையின் மனப்பூர்வந்தான் முக்கியமானது" என்றார். சத்சங்கத்திற்குப் பிறகு, குழந்தைகள் ஒரு சிறிய நிகழ்ச்சியை வழங்கினர். மாஸ்டர் 23-ம் தேதி, காலை 11 மணி விமானத்தில் சென்னைக்குப் புறப்பட்டார்.

## ஒமேகா குழந்தைகளுடன், சத்கோலில்

மாஸ்டர், மே 27-ம் தேதி தில்லி வந்தடைந்தார். LMIOS பள்ளியிலிருந்து 12-ம் வகுப்பு படித்து முடித்த மாணவர்களுக்கு, மாஸ்டருடன் சத்கோல் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அந்தப் பயணத்தில் கலந்துகொள்ளவிருந்த மாணவர்கள், மே 28-ம் தேதி R.K. புரம் ஆசிரமத்தைச் சென்றடைந்தனர். மாஸ்டர், தில்லி ஆசிரமத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த நிலத்தையும் போய்ப் பார்த்தார்.

ஞாயிற்றுக் கிழமை, குர்காவ் ஆசிரமத்தில் மாஸ்டரால் நடத்தப்பட்ட சத்சங்கத்தில் அந்த மாணவர்கள், கலந்துகொண்டனர். சத்சங்கத்திற்குப் பிறகு, அங்கிருந்த அப்யாசிகள், தங்கள் அன்பின் அடையாளமாக மாணவர்களுக்கு ஒரு சிறிய அப்யாசி டயரி மற்றும் ஒரு பேனாவைக் கொடுத்தனர். பின்னர் அன்று மாலை, மாஸ்டர் ஒரு திடீர் வரவாக R.K. புரம் ஆசிரமத்திற்குச் சென்று, மாணவர்களை சந்தித்து, அவர்களுக்கு சத்சங்கம் நடத்தினார்.

மாஸ்டர், மே 30-ம் தேதி, திங்கட்கிழமையன்று, காலை சுமார் 7 மணிக்கு மொரதாபாத்திற்கு புறப்பட்டு, அங்கே காலை 11 மணிக்குச் சென்றடைந்தார். தாமதங்கள் காரணமாக, மாணவர்கள் அவருக்குப் பின்னர் மொரதாபாத் சென்றடைந்தனர். மாஸ்டர் அவர்கள் வரவிற்காக ஆவலோடு காத்திருந்தார். மாணவர்கள் வந்தவுடன், மாஸ்டர் தனது அறையைவிட்டு வெளியே வந்து அவர்களை வரவேற்றார். அதன் பின்னர்தான், அவர் தனது மதிய உணவை உட்கொண்டு ஓய்வெடுத்தார்.

மாஸ்டர், மதியம் சுமார் 3 மணிஅளவில், ருத்ராபூருக்கு புறப்பட்டு, அங்கே மாலை சுமார் 6:45 மணிக்குச் சென்றடைந்தார். காலை 9 மணிக்கு, ஒரு சிட்டிங் கொடுத்தார். உணவு பரிமாறப்பட்டுக்கொண்டிருந்த கொட்டகையில், மாணவர்களுடன் மதிய உணவு அருந்த முடிவுசெய்தார். மாணவர்களுடன் பேசிக்கொண்டு சிறிது நேரம் செலவழித்தார். ஒரு சகோதரர், ஆன்மீகப் பணியையும், பொருள்சார்ந்த பணியையும் எவ்வாறு வேறுபடுத்திப் பார்ப்பது என்று கேட்டார். அதற்கு மாஸ்டர் வேலை என்றால் வேலைதான். அதை ஆன்மீகம் சார்ந்தது, பொருள் சார்ந்தது என்று பிரிக்க முடியாது. குளியலறையை சுத்தம் செய்வது போல, அதைச் செய்ய வேண்டிய அவசியமிருந்தால், அதைச் செய்துதான் ஆக வேண்டும். பின்னர் அவர், ஒரு செவ்வகத்தின் ஒவ்வொரு முனையிலும் இருக்கும் நான்கு விசைகளால் பிடித்துக்கொள்ளப்பட்டிருக்கிறோம் என்றார். குடும்பம், சமுதாயம், மதம் மற்றும் ஆசைகளே இந்த விசைகளாகும். நாம், இந்த விசைகளால் இழுக்கப்பட்டு, மத்தியில் அடைபட்டுக் கிடக்கிறோம். இவற்றை ஒவ்வொன்றாக உடைத்தெறியும்போது, நாம் விடுதலை பெறுகிறோம். இதன் பின் அவர் ஓய்வெடுத்துக்கொள்ளத் தன் அறைக்குச் சென்றார்.



தில்லி



முராதபாத்



ருத்ரபூர்


சத்கோல்

## சத்கோல்

ஜுன்1ம் தேதி, காலை 7 மணிக்கு மாஸ்டர் சத்சங்கம் நடத்திய பின், காலை 10 மணிக்கு புறப்பட்டு சத்கோல் சென்றடைந்தார். வானிலை, இதமாகவும், அமைதியாகவும் இருந்தது. மாலையில் மாஸ்டர் வெளியில் அமர்ந்து, அப்யாசிகளின் கேள்விகளுக்கு பதிலளித்தார். மகிழ்ச்சிக்காக இவ்வுலகம் இல்லை என்று அவர் கூறினார். ஐந்து இந்திரியங்கள் அல்லது புலன்கள், நாம் அவற்றைப் பயன்படுத்தி கற்றுக்கொள்ளவும், மெய்மையை அறிந்து கொள்வதற்காகவும்தான் நமக்கு அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் நாம் அவற்றை, நம் மகிழ்ச்சிக்காகப் பயன்படுத்துகிறோம். கடவுள் நமக்கு, வழிகாட்டுவதற்கு புத்தியையும், சரியான வழியில் நாம் செல்ல மனோசக்தியைத் தருவதற்கு இதயத்தையும் அளித்துள்ளார்.

அநேகமாக அனைத்து நாட்களுமே, மாணவர்களுடன் அமர்ந்து, அவர்களுடன் பேசுவதும், வேடிக்கையாக பேசுவதுமாக இருந்தார். ஆனால் அதற்கும் மேலாக, அவர் அளித்த ஆன்மீகத் தூண்டுதல், மாணவர்களின் இதயத்தைத் தொட்டது.

ஒமேகாவிலிருந்து வந்த பிள்ளைகளுக்கு, 'அன்புடன் ஒமேகாவிலிருந்து' ('From Omega, with Love') என்ற தலைப்புக் கொண்ட, ஒரு நினைவுப் பொருள் வழங்கப்பட்டது. அது CDயையும், மாஸ்டர் தன் கையால் எழுதிய, ஒரு செய்தியையும் கொண்ட சிறிய புத்தகமாகும்.

பயணத்தின் இறுதி நாளன்று, மாஸ்டர் மாணவர்களிடம், "மற்றவர்கள் உங்களைப் பற்றி கூறுவதை வைத்து உங்களை நீங்கள் எடை போடாதீர்கள். மற்றவர்களை உங்கள் கண்ணாடியாக வைத்திருக்காதீர்கள். நான் நானாக இருக்கிறேன், மேலும் நான் எதுவாக ஆக வேண்டுமோ, அதுவாக ஆகவேண்டும். சகஜ மார்க்கம் என்பது நாம் எதுவாக இருந்தோமோ அதிலிருந்து, எதுவாக ஆகவேண்டுமோ அதற்கு செல்லும் யாத்திரையாகும்", என்று கூறினார்.

4ம் தேதியன்று மதியம், மாஸ்டர் அங்கிருந்து புறப்பட்டு வழியில், ஹல்த்வானி ஆசிரமத்தில் சிறிது நேரம் இருந்துவிட்டு, ருத்ராப்பூருக்கு சென்றார். 5ம் தேதி மாஸ்டர் காலை சத்சங்கத்தை நடத்திவிட்டு, முராதாபாத் சென்றார். அன்றிரவு அங்கு தங்கிவிட்டு, மறுநாள் 6ம் தேதி காலை தியானத்தையும், உணவையும் முடித்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு மதியம் 12:30 மணிக்கு டில்லி வந்தடைந்து தன் பயணத்தை நிறைவு செய்தார்.

## சிங்கப்பூர்

மாஸ்டர் ஜுன் ககூம் தேதி, இரவு சிங்கப்பூர் வந்தடைந்தார். சகோ. நிதின் கோவிலா வீட்டில் அவர் தங்கினார். இடப்பற்றாக்குறையினால், வெளிநாட்டு அப்யாசிகளுக்கு காலையிலும், உள்ளூர் அப்யாசிகளுக்கு மாலையிலும் சத்சங்கம் பிரித்து நடத்தப்பட்டது. சத்சங்கத்திற்கு இடைப்பட்ட நேரத்தில், அப்யாசிகள் ஒன்றாக இணைந்திருந்து, அவருக்காக காத்திருந்தனர். பெரும்பாலான சத்சங்கத்தை மாஸ்டர் நடத்தினார். ககூம் தேதி, ஞாயிற்றுக் கிழமையன்று, மாஸ்டரை வரவேற்பதற்காக, சிங்கப்பூர் தியான மையத்தில் அனைத்து அப்யாசிகளும் கூடியிருந்தனர். சத்சங்கத்தை முடித்தவுடன், அங்கிருந்த அனைவரையும் வாழ்த்தி, வரிசையாக நின்று கொண்டிருந்த மக்களிடம் மெதுவாக நடந்து சென்று, சிலரிடம் சில வார்த்தைகள் பரிமாறிக் கொண்டும், புன்னகையுடனும், சிலரது தோள்களைத் தட்டிக் கொடுத்தும், குழந்தைகளுக்கு விசேஷ ஆசிர்வாதத்தையும் வழங்கினார். வழக்கத்திற்குமீறிய அமைதியும், மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்ற தன்மையும் அங்கு இருந்தது. ஒவ்வொருவரின் இதயத்தையும் தொட்டு, ஒளிரச் செய்தது, தெரு விளக்கை ஒவ்வொன்றாக ஏற்றி செல்பவர் போலிருந்தது. பின்னர் அதே நாளில், சிங்கப்பூரின் வியப்பூட்டுகின்ற கட்டுமான சிறப்பம்சத்தைக் கொண்ட மெரினா விரிகுடா மணல் (Marina Bay Sands) பகுதியை பார்ப்பதற்கு சென்றார்.

திங்களன்று மாலை, ப்ரிபெக்ட்களுக்கு சத்சங்கம் நடத்தி, பின் அங்கிருந்த அப்யாசிகளுடன் சுமார் ௩0 நிமிடம் உரையாற்றினார். அவரது உரையாடலிலிருந்து சில பகுதிகள் பின் வருமாறு:

- ஒருவர் பாபூஜி மகராஜிடம், நீங்கள் செல்வச் செழிப்பிற்கு எதிரானவரா? என்று கேட்டதற்கு, பாபூஜி மகராஜ், நான் அதற்கு எதிரானவனல்ல. பணம் சம்பாதித்தல் என்பது உங்கள் திறன்களை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்ற கேள்வியே. ஆனால் நதிபோன்று, பணமும் அமைதியான நீரோட்டமாக இருக்க வேண்டும். உங்களுக்குத் தேவையானதை மட்டும் அதிலிருந்து எடுத்துக் கொண்டு, மற்ற அனைத்தையும் அதன் ஓட்டத்திற்கு விட்டுவிடுதல் வேண்டும் என்று கூறினார்.
- சகஜ மார்க்க த்தின் சாரம்சம் சமநிலை பற்றியது, நம் வாழ்க்கையின் தரத்தையும், வாழ்க்கையின் மதிப்பையும், பொருட்களால் அல்லாமல், மாறுவதன் மூலமாக உயர்த்துவதே ஆகும்.
- அன்பின் மூலமாக ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு வளர வேண்டும். தியானத்தின் மூலமாக, நம் இதயத்தில் மாஸ்டர் மீது அன்பு உருவாகி, அது வளர்ந்து, அந்த அன்பு நம்மை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதே சகஜ மார்க்கத்தின் சிறப்பம்சமாகும்.
- ஒவ்வொரு செடியின் வளர்ச்சியும் அதன் தன்மைக்கேற்றவாறு இருக்கும். அனைத்தையும் ஒன்றாக வளர வேண்டும் என்று நீங்கள் கூற முடியாது. வெள்ளப்பெருக்கின் போதுதான் ஒரே மாதிரி தண்ணீர் மேலெழுகிறது, அழிக்கவும் செய்கிறது. ஆனால் செடி தானாகவே வளர வேண்டும். நாம் எவரிடமும் அன்பைத் திணிக்க இயலாது.

மலேசிய ஆசிரமத்தைத் திறக்கவும், ஆசிய செயலரங்கைத் துவக்கி வைக்கவும், உஉம் தேதி, மதியம் மாஸ்டர் மலேசியா சென்றார்.


சத்கோலில் மாஸ்டருடன் LMOIS



சிங்கப்பூர்

# 24ஜூலை விழாவிற்கு தயாராகுதல்

## சகஜ மார்க்கத்தில் பண்டாராக்களின் சிறப்பம்சங்கள்

சகஜ மார்க்கத்தில், அன்றைய நாட்களில் நடந்த பண்டாராக்கள், அதாவது 30 பேர் ஒன்று கூடி கலந்துக் கொண்டு, ஷாஜஹான்பூரில், பாபூஜி மகராஜ் அவர்களின் சிறிய வீட்டில் நடந்ததைப் பற்றிக் கூறி, மாஸ்டர் நமக்கு அடிக்கடி நினைவுபடுத்துவார். திருப்பூரிலுள்ள, டைமண்ட் ஜூபிலி பார்க் போன்ற இடங்களில், பண்டாராக்களின் போது கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை விகிதம், ஐம்பதாயிரமாக உயர்ந்துள்ளது. இது நமது மாஸ்டர்கள் செய்த மிகப்பெரிய வேலை என்று அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரியத் துவங்கியுள்ளது.

24ஜூலை2006 அன்று, ராய்ப்பூரில், அவர் ஆற்றிய உரையில், பண்டாராக்களின் ஆன்மீக நோக்கத்தை நமக்குத் தெளிவுபடுத்தி, பின்வரும் கருத்துகளைக் கூறினார்.

- கொண்டாடுவதற்கான முக்கியத்துவம் பண்டாராக்களில் இருந்தாலும் அவை கொண்டாட்டமல்ல. அவை மகிழ்வதற்காக அல்ல. ஆனால் அந்த சூழலில், அற்புதமான ஆன்மீக அருள் நிறைந்திருக்கும். அந்த சூழலில் உருவாகின்ற உள்நிலையை மகிழ்வதற்கு அனுமதி உண்டு. சுருக்கமாக, அங்கு செலவழிக்கும் நேரத்தில், ஆணோ, பெண்ணோ, ஒவ்வொருவரும், தனது மாஸ்டரின் நினைவிலிருந்து, தன் ஆன்மீக முன்னேற்றத்திற்காக பயன்படுத்த வேண்டும்.

- இந்த குறிக்கோளிலிருந்து, இந்த இலட்சியத்திலிருந்து, இந்த நோக்கத்திலிருந்து, நாம் விலகினோமேயானால் அது, பொறுப்பில்லாமல், தேவையற்ற விஷயங்களில் நம் பொன்னான நேரத்தை வீணாக்குவதாகும். சமோசா எனக்கு பிடித்தாலும், உரையாற்றிக் கொண்டிருக்கும் போது, சமோசா தீர்ந்து விடும் என்ற பயத்துடன், கேண்டீன் முன்பு கூட்டமாக நின்று கொண்டிருக்கக் கூடாது.

- இங்கு தியானம் செய்யும் நேரத்தில், மனம் ஒன்றி முழுமையான கவனம் இங்கு இருக்க வேண்டும். (உரையாற்றுவதை கவனிக்கும்போதும், சகோதர சகோதரிகள் அளிக்கும், அற்புதமான இசையை கவனித்துக் கொண்டிருக்கும்போதும், நமது ஆன்மாக்கள் நடனம் ஆட வேண்டுமே தவிர, நம் உடல்கள் அல்ல.)

- நம்முள்ளிருக்கும் அன்பு, பக்தி போன்ற உணர்வுகளைத் தூண்டுவதற்காக, பக்தி பாடல்கள் உள்ளன. இவை நாம் மனம் ஒன்றி கவனமாக அமர்ந்திருக்கும் சமயத்தில் கூட, தெய்வீக அருளை நம்மீது இறங்க வைக்கும் ஆற்றலைக் கொண்டது.

- மற்றொரு செய்தியில், மகிழ்ச்சி இல்லையெனில், ஆன்மீகமில்லை என்று பாபூஜி மகராஜ் கூறுகிறார். ஆனால் மகிழ்ச்சி, வெளியில் வெளிப்படாமல், நம் இதயத்தில் இருக்க வேண்டும். ஆன்மா உட்புறமாக மகிழ்ச்சியடையும்போது, மேலெழும்பும்போது, தற்காலிகமாகவாவது, அறிந்திராத, பார்த்திராத உலகமான, ஒளியுலகம் என்று நாம் அழைக்கும் அந்த உலகத்திற்கு நம்மை அழைத்து செல்லும்.

- இந்தத் தருணங்கள், அறிவுத்திறனுடன் மட்டுமல்லாமல், கவனத்துடன் மட்டுமல்லாமல், உங்கள் ஆன்மா, உடல், மனம் என அனைத்தும் முழுமையாக, நாம் இப்போது இருக்கும் வாழ்க்கையிலிருந்து, விவரிக்க இயலாத, ஆனால் நாம் ஒவ்வொரு சிட்டிங்கிலும், அதைத் தேடுகின்றபோது உணர முடிகின்ற வாழ்க்கைக்கு நம்மை மாற்ற, நமக்கு வழிகாட்டியாக இருக்கும் அந்த முக்கியத்துவம் வாய்ந்த மாஸ்டர் மீது இருக்கட்டும் என வற்புறுத்திக் கூறினார்.

http://www.sahajmarg.org/literature/online/speeches/the-real-purpose-of-bhandaras




மாஸ்டர் பிறந்த நாள் விழாவிற்கான வேலைகள், திருப்பூரிலுள்ள, டைமண்ட் ஜூபிலி பார்க்கில், முழுவீச்சாக நடந்து கொண்டிருக்கின்றன. தியானக்கூடம், தங்குமிடங்கள், கேண்டீன் பகுதிகள் மற்றும் பல தேவைகளுக்கான வேலைகள் அனைத்தும், நடைபெற்று வருகின்றன. தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது என்பதால், அதை ஈடுகட்டத் தேவையான திட்டங்கள் தீட்டுவது, எப்போதுமே பெரிய சவால்தான். குழாய் அமைப்பு வசதிகளும், கழிப்பறை பகுதிகளும் சரிபார்க்கப்படுகிறது. விழாவிற்கு மற்றும் கையிருப்பிற்குத் தேவையான மின்சார திட்டங்களும் உள்ளன. அங்கு வேலை செய்யும், தன்னார்வத் தொண்டர்கள் மகிழ்ச்சியுடன் பங்கு கொண்டு வேலை புரிகிறார்கள். ஆனால் மாஸ்டரும், மற்ற அனைவரும் பண்டாராவிற்கு வரும்பொழுது, அவ்விடம் எப்படி மாறப்போகிறது என்ற ஒரு அச்ச உணர்வும் அவர்களிடம் உள்ளது. ஒவ்வொருவரும், பண்டாராவில் கலந்துகொள்ள தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். "அன்பில் ஒழுங்குமுறைக்கட்டுப்பாடு" என்ற பண்டாரவின் கருப்பொருளில் தம்மை உள்ளார்ந்து ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

## பாபூஜி மகராஜ்

"நமது மிஷனின் விசேஷ தினமான, மாஸ்டரின் பிறந்த நாள், மதிப்புடனும், அன்புடனும் கொண்டாடப்பட வேண்டும். ஒவ்வொரு பக்தனும், தான் இந்த வாழ்க்கையில், தன்னை மிக உயர்ந்த இலட்சியத்திற்கு அழைத்து செல்லும் தெய்வீக வழிகாட்டியை சந்திப்பதற்கு நல்ல வாய்ப்பு கிட்டியுள்ளது என்பதை உணர வேண்டும். நம் பயிற்சிமுறையில், இது முக்கியமான நேரம்: ஒரு பக்தனுக்கு, தன் இதயபூர்வமான நன்றியுணர்வைக் காட்டுவதற்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாகும் இது."


வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 30, 2004 - 10 a.m.

ஒளி உலகிலிருந்து வரும் அருட்செய்திகள்





ஜூலை 2011 மலர் 4 இதழ் 4
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்



# பூஜ்ய பாபூஜி மகராஜின் 112-வது பிறந்தநாள் கொண்டாட்டங்கள்

நமது பெருமதிப்பிற்குரிய பாபூஜி மகராஜ் அவர்களின் 112-வது பிறந்தநாள் விழா நாடு முழுவதும் நன்றி மற்றும் பக்தியுடன் கொண்டாடப்பட்டது. அது பற்றிய அறிக்கை பின்வருமாறு:


குல்பர்கா


ஹுப்ளி


துர்காபூர்

## கர்நாடகா வடக்கு

குல்பர்கா, சேடம், சித்தாபூர், சோராபூர் மற்றும் ஹம்னாபாத் போன்ற மையங்களிலிருந்து கலந்துகொண்ட சுமார் 300 அப்யாசிகளுக்கு, குல்பர்கா ஆசிரமம் மையமாக அமைந்தது. பாபூஜி வாழ்க்கை பற்றிய வீடியோ, அவருடன் இருத்தல் என்ற ஆடியோ குறுந்தகடு, பாபூஜியுடனான அனுபவங்கள் பற்றிய உரைகள், பாபூஜி வாழ்க்கை பற்றிய வினாடி வினா மற்றும் மாஸ்டரின் உரை அடங்கிய வீடியோ போன்றவை இந்த நிகழ்ச்சியின் அங்கங்களாகும். அப்யாசிகள் அன்று முழுவதுமாக தெய்வீக ஆசியில் மூழ்கினர்.

தார்வாடு, பேலூர், கடக், புத்கல்கட்டி, சிர்சி, குகனூர், ரானெபென்னூர் மற்றும் கல்லூர் போன்ற இடங்களிலிருந்து சுமார் 250 அப்யாசிகள், ஹுப்ளி ஆசிரமத்தில், மிகவும் ஆழ்ந்த சத்சங்கத்திற்காக காலையில் ஒன்று கூடினர். காலை உணவைத் தொடர்ந்து, 'நேரம் என்பதிலான பயணம்' (Journey in Time) என்ற குறுந்தகடு இயக்கப்பட்டது. பாபூஜி வாழ்க்கை தொடர்பான ஒரு நாடகம், இளைஞர்களால், பாபூஜி மற்றும் நமது மாஸ்டர் இருவருக்கும் இடையேயான நிகழ்வுகளைக் கொண்டு நடத்தப்பட்டது. மேலும், பாபூஜியின் புகைப்படங்கள் அடங்கிய 'Face Of The Essence' என்ற புகைப்படத் தொகுப்பும் காட்டப்பட்டது. மதிய வேளையில் வினாடிவினா, குழந்தைகள் நிகழ்ச்சி ஆகியவை இடம்பெற்று மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி முடிவடைந்தது. அந்த சூழலானது, பண்டாராவை மிகவும் ஒத்திருந்தது.

பிதர் ஆசிரமத்தில் நடைபெற்ற கொண்டாட்டங்களில் பால்கி, சங்லர் மற்றும் தானாகுஷ்னூர் போன்ற இடங்களைச் சேர்ந்த சுமார் 127 அப்யாசிகள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சி, பாபூஜி மகராஜின் வாழ்க்கை மற்றும் அவர்தம் போதனைகளை மையமாகக் கொண்டிருந்தது. சகோதரர் ஹரிலால் சவான் உரை நிகழ்த்தினார். சகோதரர் பண்டரிநாத், பாபூஜி மகராஜின் போதனைகள் மற்றும் கோட்பாடுகள் பற்றி வினாடி வினா நிகழ்த்தினார்.

## கர்நாடகா தெற்கு

பெங்களூரின் பனசங்கரி ஆசிரமத்தில், சகோ. டாக்டர் பெருமாள், சகோதரி வசந்தகுமாரி, சகோ. சுப்ரமண்யா B.G. மற்றும் சகோதரி மாதுரி ஆகியோரால், பாபூஜி மகராஜ் அவர்களுக்கு, சிறப்பான புகழுரை அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகள் பாபூஜி அவர்களின் வாழ்க்கை மற்றும் போதனைகளை மையமாகக் கொண்டிருந்தன. அதில் ஒரு பேச்சாளர், பௌதீக வாழ்க்கையில் ஒரு ஆசிரியர் செயல்படும் விதம் மற்றும் குருவின் செயல்பாடு இவற்றிற்கிடையேயான வேறுபாட்டை வெளிக்கொணர்ந்தார். குருவானவர் சிஷ்யனின் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்விலும் தாயைப் போன்று அக்கறை கொண்டுள்ளார் என்று எடுத்துரைத்தார். சகோதரர் ஸ்ரீனிவாஸ் மற்றும் சகோதரர் சுப்ரமண்யா அவர்களால் நடத்தப்பட்ட வினாடி வினா அப்யாசிகளுக்கிடையே ஒரு எதிர்பார்ப்பை உண்டாக்கியதுடன் கற்றுக்கொள்ளும்படியும் அமைந்தது. மதிய வேளையில் பாபூஜி அவர்களின் வீடியோ காண்பிக்கப்பட்டு, மாலை சத்சங்கத்துடன் விழா முடிவடைந்தது.

## மேற்கு வங்காளம்

29, ஏப்ரல் அன்று மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. அடுத்த நாள் கொல்கத்தா, பர்த்வான், பனாகர், ராணிகஞ்ச், அசான்சால், பர்ன்பூர், கஜோரா சியூரி, ஆன்டள், சித்ரஞ்சன் மற்றும் பன்குரா மையங்களிலிருந்து அப்யாசிகள் மற்றும் குழந்தைகள் உட்பட சுமார் 80 பேர் துர்காபூரில் கூடினர். சகோதரர் U.S.மிஷ்ரா, சகோதரி குசும் மெஹரா மற்றும் சகோதரர் பரிமல் போன்றோர் காலையில் இயக்கப்பட்ட வீடியோவைத் தொடர்ந்து உரையாற்றினர். மதியம் நடைபெற்ற கேள்வி பதில் நிகழ்ச்சி நிறைய சந்தேகங்களை நிவர்த்தி செய்தது. அதனைத் தொடர்ந்து மாலை சதசங்கம் நடைபெற்றது. இந்த கொண்டாட்டங்கள் மே 1 அன்று, காலை சத்சங்கத்துடன் முடிவடைந்தன. அப்யாசிகள் இந்த கூட்டங்களின்போது, ஆன்மீகச் சூழலில் மூழ்கினர்.


கொள்ளேகால்


லக்னோவ

T.நரசிபுராவைச் சேர்ந்த அப்யாசிகள் உள்ளிட்ட, சுமார் 41 அப்யாசிகள் கொள்ளேகாலில் நடைபெற்ற கொண்டாட்டங்களில் கலந்துகொண்டனர். சகோதரர் மதுசூதன், சகோதரர் மகாதேவகவுடா, சகோதரி அலுமேலம்மா, சகோதரி தனலட்சுமி, சகோதரர் சிவகுமார் மற்றும் சகோதரர் மகாதேவசாமி போன்றோர் உரையாற்றினர். பங்கேற்பாளர்கள், தெய்வீகத்துடன் ஒருங்கிணைந்த உணர்வை இந்த கொண்டாட்டங்கள் மூலம் உணர்ந்தனர்.

## உத்திரபிரதேசம்

லக்னோவில் நடைபெற்ற முழு நாள் விழாவில், 428 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இந்த நாளில் பாபூஜி அவர்களின் வாழ்க்கை பற்றிய வீடியோ காண்பிக்கப்பட்டது. உரைகள் நிகழ்த்தப்பட்டன. பஜனைகள் பாடப்பட்டன. இளைஞர்கள் மற்றும் குழந்தைகள், ஆன்மீக போதனைகள் அடங்கிய பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்கினர். இந்த நிகழ்ச்சி 5.30 மணிக்கு நடைபெற்ற மாலை சத்சங்கத்துடன் முடிவடைந்தது.

ஜூலை 2011 மலர் 4 இதழ் 4
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்


சின்னவல்லிகுளம்


ஜபல்பூர்

## ஜபல்பூர், மத்தியபிரதேசம்

ஏப்ரல் 29 அன்று மாலை சத்சங்கத்துடன் தொடங்கிய, "அன்பில் ஒழுக்கம்" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட விழாவில், சுமார் 350 அப்யாசிகள் கலந்து கொண்டனர். சகோதரர் விகல்ப் (ZiC) எப்படி நாம் ஆன்மீகப் பாதையில் நுழைகிறோம் என்றும், மாஸ்டரிடமான உறவை எப்படி உருவாக்குகிறோம் என்றும், எப்படி அவர் மீதான அன்பு ஆழ்மனதின் மட்டத்தில் உருவாகிறது மற்றும் அது எவ்வாறு மேல்மட்ட மனதில் துணை செய்கிறது என்றும் விளக்கினார். சகோதரி தீபா பரத்வாஜ் "காதலரின் குணாதியசங்கள்" என்பது பற்றி உரையாற்றி "systematic divangee" என்ற சொல்லை உருவாக்கினார்.

டாக்டர் R. K. ஸ்ரீவாஸ்தவா, எப்படி உண்மையான அன்பு கொண்டவர், தானாகவே ஒழுக்கம் அடைகிறார் என்பது பற்றி உரையாற்றினார். மற்றும், சகோதரி சுனிதா சுக்லா எப்படி அன்பு மற்றும் ஒழுக்கம் ஒன்றோடொன்று இணைந்துள்ளது என்பது பற்றி கூறினார். ஒரு வினாடி வினா நிகழ்ச்சி, பத்து நியமங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாடகம், மற்றும் சில பஜனைகள் தெய்வீகப் பிரசன்னத்தை உணர்வதற்கும், ஈர்த்துக்கொள்வதற்கும் உதவியது. பாபூஜி மகராஜின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு குறுந்தகடு காண்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, குழந்தைகளின் கலை நிகழ்ச்சி நடந்தது. சகோதரர் விகல்ப் ஆசிரமத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதின் அவசியத்தையும், அது எப்படி வருங்கால சந்ததியினருக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதின் அவசியத்தையும் பற்றி விளக்கியதுடன், ஞாயிறு அன்று விழா நிறைவுபெற்றது.

## தமிழ் நாடு, தெற்கு

மதுரையில் நடைபெற்ற விழாவில், பதிமூன்று மையங்களிலிருந்து, சுமார் 500 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அதன் மையக்கருத்தாக "சத்யோதயம்" எடுத்துக் கொள்ளப்பட்டது. மதுரை, சோழவந்தான், தேனி, வத்தலகுண்டு மற்றும் காரைக்குடி மையங்களிலிருந்து வந்திருந்த பங்கேற்பாளர்கள், இந்த புத்தகத்திலிருந்து சில அத்தியாயங்களை விளக்கினர். மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர், மீதமுள்ள தலைப்புகளைப் பற்றி மேலூர், சிங்கம்புனரி, பரமக்குடி, இராமநாதபுரம், மானாமதுரை, மதுரை மற்றும் சிவகங்கை மையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகள் வழங்கினர். சகோதரர் பழனியப்பன், சகோதரர் நாகராஜன் மற்றும் சகோதரர் ராதா கிருஷ்ணன் இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து வழங்கினர். அந்த தெய்வீகச் சூழ்நிலையில், பாபூஜி நினைவுகளுடன் இருப்பதை பங்கேற்பாளர்கள் இனிமையாக உணர்ந்தனர். மேலும் அவரின் படைப்புகளைப் பெரிதும் புரிந்துகொள்வதற்கு இடமளித்ததாக எண்ணினர்.

விருதுநகர், சின்னவல்லிகுளம், அருப்புக்கோட்டை, கரியப்பட்டி, கோவில்பட்டி மற்றும் சிவகாசி மையங்களிலிருந்து, சுமார் 30 அப்யாசிகள், சின்னவல்லிகுளம் ஆசிரமத்தில் கூடியிருந்தனர். காலை சத்சங்கத்தைத் தொடர்ந்து, பாபூஜியின் வாழ்க்கை வரலாறு பற்றி சகோதரர் சுவாமிநாதன் படித்தார். சாதனா, நற்பண்பு உருவாக்கம், கீழ்ப்படிதல், ஏற்றுக்கொள்தல், சரணாகதி போன்ற தலைப்புகளில், தங்களின் கருத்துக்களை பங்கேற்பாளர்கள் பகிர்ந்துகொண்டனர். இதில் முக்கியமாக வெளிக்கொணரப்பட்டது என்னவென்றால், மிஷன் பணிகளை நமது பணிகளைப் போல் உணரும் மனப்பான்மை மேம்படல் வேண்டும் என்பதாகும். மதிய நேரப்பகுதியில், அன்பு என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இந்த முழு நாள் விழா மாலை சத்சங்கத்துடன் முடிவடைந்தது.


அகமதாபாத்


ஆனந்த

## குஜராத்

குஜராத்தைச் சேர்ந்த ஆனந்தில், சுமார் எண்பத்துமூன்று அப்யாசிகள், விழாவில் கலந்து கொண்டனர். சத்சங்கத்தைத் தொடர்ந்து இயக்கப்பட்ட "அன்புக்கடல்" என்ற குறுந்தகடு, ஒவ்வொருவரையும் பாபூஜி மகராஜ் வாழ்ந்த காலத்திற்கு அழைத்துச் சென்றது. தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து, ஒவ்வொரு அப்யாசிக்கும் நன்னெறி செய்திகளை எடுத்துரைக்கும் சிறுகதை ஒன்று கொடுக்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் தத்தம் கதைச்சுருக்கத்தை விளக்கி, தங்களுடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர். மதிய வேளையில் தியானம், சுத்திகரிப்பு, பிரார்த்தனை, நிலையான நினைவு மற்றும் ஒரு வாழும் குருவின் அவசியம் போன்ற தலைப்புகளில் குழுக் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. மாலை சத்தங்கத்தைத் தொடர்ந்து பஜனைகள் பாடப்பெற்றன.

குஜராத்திலுள்ள 6-A மண்டலத்தைச் சேர்ந்த சுமார் 900 அப்யாசிகள், அகமதாபாத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டனர். அங்கு குழு கலந்துரையாடல்கள், சிறு நாடகங்கள், மாஸ்டரின் புகைப்பட கண்காட்சிகள் ஆகியவை நடைபெற்றன. சுற்றுப்புறச்சூழல் பற்றிய அக்கறை மற்றும் விழிப்புணர்ச்சியை முன்னிட்டு, சில மரக்கன்றுகள் ஆசிரமத்தில் நடப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை, புதிய அப்யாசிகளுக்காக, ஒரு ATP பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்த நிகழ்ச்சிகளைத் தொலைதூரங்களிலுள்ள மையங்கள் மற்றும் அருகிலுள்ள சிறிய மையங்களுக்கு எடுத்துச் செல்லும் பேச்சாளர்களுக்கு, பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

# இளைஞர்களுக்கான வளர்ச்சி முகாம்

## இந்தூர், மத்திய பிரதேசம்



17 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கான, தங்கும் வசதி கொண்ட இரண்டு நாட்கள் முகாம், ஜுன் 4, 5 ம் தேதிகளில் இந்தூரில் நடைபெற்றது. மென்திறன்களை அவர்களுக்குள் கொண்டு வருவதும், ஆன்மீகம் மற்றும் உலகியல் வாழ்வின் வளர்ச்சிகளில் சம நிலையினை அவர்கள் அடைய அவர்களுக்கு உதவுவதும் தான் இந்த முகாமின் நோக்கம்.

சன்வேர், போபால், சோஹாஜ்பூர், தேவாச், ரட்லம், விதிசா மற்றும் இந்தூர் ஆகிய இடங்களில் இருந்து இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர். அவர்கள் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டனர். செய்திகள் பரிமாற்றும் திறன் குறித்த நிகழ்ச்சியுடன், மனதில் தைரியத்தினை வளர்த்துக்கொள்ளுதல், பிரச்சனைகளை முடிவு செய்வதில் விடாமுயற்சியுடன் இருத்தல், ஆக்கும் சக்தியினை மேம்படுத்துதல், புதுமையாக சிந்தித்தல் ஆகியவை குறித்த நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாலையில் இரகசியம் (The Secret) என்ற படம் திரையிடப்பட்டது.

மறு நாள் ஞாயிறு சத்சங்கத்திற்குப்பின்னர், குழுக்களாக வேலை செய்தல், கால நிர்வாகம் பற்றிய விளையாட்டுக்களுடன், திறமையை வளர்த்துக் கொள்ளுதல் பற்றிய சுவாரசியமான நிகழ்ச்சியும் இருந்தது. நேர்முகத் தேர்விற்கான திறன் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சியும், குழு விவாதங்களும் நடத்தப்பட்டன. இறுதி நிகழ்ச்சியினை சகோ. விகால்ப் முந்ரா, மற்றும் சகோ. ச்ரேஷ்கர் சௌத்ரி ஆகியோர் நடத்தினர். தினசரி அதிக பணியாளர்களை சமாளித்துவரும் இந்த இரண்டு இளம் தொழில் அதிபர்களும், உண்மையான வாழ்க்கைநிலை பற்றிய கேள்விகளுக்குத் தங்களுடைய அனுபவத்தில் இருந்து பதில்களை அளித்தனர். பங்குபெற்ற அனைவருக்கும், இந்த நிகழ்ச்சி செயல்முறை விளக்கத்துடனும், பயனுள்ளதாகவும், அறிவு பூர்வமானதாகவும் இருந்தது.

## மண்டல அளவிலான இளைஞர்களுக்கான கருத்தரங்கு, வதோதரா, குஜராத்

இந்நிகழ்ச்சி, ஜுன் 11, 12ல், வதோதரா மையத்தில் முதல் தடவையாக நடைபெற்றது. பல்வேறு மையங்களில் இருந்து 75 இளைஞர்கள் பங்கு கொண்டனர். காலை நிகழ்ச்சியில், சாதனாவின் பல்வேறுஅம்சங்கள் மற்றும் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல் போன்றவை குறித்து குழு விவாதங்களும், தொகுப்பு உரைகளும், கேள்விபதில் நிகழ்ச்சியும் நடைபெற்றன. பிற்பகல், பத்து நியமங்கள் பற்றிய நாடகம் ஒன்று வழங்கப்பட்டது. மாலையில், மைதான விளையாட்டுகள் நடைபெற்றன. இரவு உணவுக்குப்பின்னர், அனைவரும் பாடல்கள், பஜன் ஆகியவற்றினைப் பாடினர். நகைச்சுவையான விஷயங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர். சகோ.கமலேஷ் பட்டேல் வழங்கிய, "நம் பயிற்சியினை திறம்பட செய்வது எப்படி" என்ற நிகழ்ச்சிக்குப்பின்னர், அனைவரும் அதிக பயன் பெரும் வகையில், கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. அக்டோபரில் நடக்கவிருக்கும் அடுத்த கருத்தரங்கிற்கான பொருள் குறித்துத் தெரிவிக்கும்படி அவர்களைக் கேட்கப்பட்ட போது, "மனதின் சக்தி மற்றும் ஒழுக்கம்" என்ற பொருள் தேர்வு செய்யப்பட்டது.

## ஞாயிறு இளைஞர் நிகழ்ச்சி, தோமல்குடா, ஆந்திரப்பிரதேசம்

ஜனவரி 2011 முதல், ஒவ்வொரு ஞாயிறும் காலை 9.30 முதல் 11.30மணி வரை, தொமல்குடா SR நகர் ஆசிரமத்தில், இளைஞர்களுக்கான நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இதில் சராசரியாக 20-25 நபர்கள் கலந்து கொள்கின்றனர். இளைஞர்களுக்கு பயிற்சி முறை மற்றும் மிஷனைப்பற்றி அதிக தகவல்களை அளிப்பதும், அதனை வெளிப்படுத்த அவர்களுக்கு ஒரு மேடை அமைத்துக் கொடுப்பதும்தான் இந்த நிகழ்ச்சியின் நோக்கம். நன்னடத்தையினைக் கொண்டுவருதல், நாட்குறிப்பு எழுதுதல், விளையாட்டு, சகஜமார்க்க நூல்களில் இருந்து வார்த்தைப் புதிர், நாடகம் நடித்தல், கதை சொல்லுதல், சொல் விளையாட்டு, ப்ரெபெக்டுகளுடன் கேள்வி பதில் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இளைஞர்களிடம், சகஜமார்க்க நன்நெறி மற்றும் நல்ல குணங்களை உருவாக்குவதற்கான ஒரு முயற்சியாக இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

## தங்கும் வசதிகொண்ட முகாம், இந்தூர்

எதிர்கால அப்யாசிகளுடன் தொடர்பை மேம்படுத்திக்கொள்வதற்காக, இந்தூரில், மே 21, 22 ம் தேதிகளில், 13 முதல் 17 வயது வரையிலானவர்களுக்கு, முகாம் நடத்தப்பட்டது. ஞாபக சக்தியினைத் தூண்டும் விதத்திலான விளையாட்டின் மூலம், ஆக்கபூர்வமான வழியில் இளைஞர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டனர். பின்னர் அவர்கள் 2 குழுக்களாகப் பிரிந்து, முடிச்சுப்போடுதல், ஒரு தாளின் மேல் நின்று கொண்டு அதனை மடித்தல், "matki phod" என்ற பாரம்பரிய போட்டியில் பங்கு கொள்ளுதல் போன்றவற்றில் கலந்து கொண்டனர். "தன்னைப் பற்றி அறிந்து கொள்ளுதல்", "இலட்சியத்தினை நிர்ணயித்தல்" போன்ற நிகழ்ச்சிகளை சகோதரி யாமினி கார்மார்கர் மற்றும் சகோ.சுனில்கன்னா ஆகியோர் நடத்தினர். மாலையில் அருகாமையில் உள்ள மண்டல பூங்காவிற்கு குழந்தைகள் அழைத்துச்செல்லப்பட்டனர். அவர்கள், சகோதரிகளின் மேற்பார்வையில் சுவையான பாவ்பாஜியினைத் தயாரித்தனர்.

மறு நாள் அவர்கள் அருகில் உள்ள SRCMன் புதிய இடத்திற்குச் சென்றனர். அங்கு பாரம்பரிய இந்திய விளையாட்டுப்பொருட்கள் தயாராய் வைக்கப்பட்டு இருந்தன. அடுத்த இரண்டு மணி நேரமும் பட்டம் பறக்கவிடுதல், சாட்டொலியா, கில்லிதாண்டா போன்ற விளையாட்டுகளை விளையாடினர். சகோதரி சஷிசர்மா மற்றும் சகோ. ராஜேஷ் ராவெர்கர் ஆகியோர் நடத்திய "இதயத்தில் இருந்து ஒரு கடிதம்" என்ற நிகழ்ச்சி இதயத்தினை உருகவைப்பதாக இருந்தது. ஒரு தாய் தன் குழந்தைக்கு எழுதிய கடிதத்தினை அவர்கள் படித்தனர். அந்த கடிதத்தில், தன் குழந்தை நலமுடன் வாழவேண்டும் என்ற தன் ஆதங்கத்தினை அந்த தாய் வெளிப்படுத்தியிருந்தார். இந்த கடிதத்திற்கு, குழந்தைகள் அவர்களின் தாயாருக்குத் தங்களது அன்பையும் நன்றியினையும் தெரிவித்து பதில் எழுதினர். அவர்களின் வாழ்வில் பெற்றோர்களின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதனை அவர்கள் உணர வேண்டும் என்பதே இதன் நோக்கம். 'இறைவனும் நானும்' என்ற நிகழ்ச்சியுடன் இந்த முகாம் நிறைவு பெற்றது. 17



வதோதரா



இந்தூர்

ஜூலை 2011 மலர் 4 இதழ் 4
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# குழந்தைகளுக்கான கோடைகால முகாம்கள்

## பாபுஜி நினைவு ஆசிரமம், சென்னை

7 முதல் 13 வயதுள்ள 70 குழந்தைகளுக்காக, மே 6 - 8வரை, முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அறிமுகநிகழ்ச்சியுடன் முகாம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் கைத்திறனை வெளிக்காட்டும் செயல்பாடுகள் தொடர்ந்தன. உடற்பயிற்சி, மாஸ்டரின்மேல் பாடல்கள், கலந்துரையாடல், ஆசிரம வரைபடம் வரைதல், ஒரு குழுவாக திறமையினை வெளிப்படுத்தும் விளையாட்டுகளை விளையாட ஊக்கப்படுத்துதல், அன்பு அனைத்தையும் வெல்லும் என்ற கருத்தின் அடிப்படையிலான ஒரு நாடகம், துணிப்பைகளில் வர்ணம் தீட்டுதல், வாழ்வின் உண்மையான புதையல் எது எனக் கண்டுபிடிக்க புதையல் வேட்டை, கேள்வி பதில் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பகவான் கிருஷ்ணர் பற்றிய திரைப்படம் திரையிடப்பட்டது. முடிவில், கலைநிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பின்னர், அனைத்து குழந்தைகளுக்கும் அவர்களின் புதிய நண்பனாக ஒரு ரோஜா செடியும், நிகழ்ச்சியினை குறித்த CDயும் வழங்கப்பட்டன. பெற்றோர்கள், குழந்தைகளுடன் நிகழ்ச்சி குறித்த கருத்தினை அறிய, ஒரு கலந்துரையாடலுடன் முகாம் நிறைவு பெற்றது.


சென்னை

## வேலூர், தமிழ்நாடு

3-15 வயதுள்ள சுமார் 50 குழந்தைகளுக்காக, மே 28ம் தேதி, வேலூர் ஆசிரமத்தில் ஒரு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. பல்வேறு இடங்களில் இருந்து வந்த குழந்தைகள் ஒருவருக்கொருவர் பழகி செயல்புரியவும், அவர்களின் வாழ்க்கையில் நன்னடத்தையுடன் கூடிய ஒழுக்கத்தினை வளரச்செய்வதும் தான் இந்த நிகழ்ச்சியின் நோக்கமாக இருந்தது. அவர்கள் வயதின் அடிப்படையில் 2 குழுக்களாக பிரிக்கப்பட்டனர். குழுவாகவும், தனிப்பட்ட முறையிலும் படைக்கும் திறனை வளர்க்கும் விதத்தில் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டன. குழந்தைகள், நடனம், பாட்டு, யோகா போன்றவற்றில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். 'சகஜ மார்க்கம்-வாழும் வழி' என்ற நாடகம் இளைஞர்களால் நடித்துக்காட்டப்பட்டது. இந்த நாடகத்தில் இளைஞர்களின் உள்முக மாற்றம், மாஸ்டருக்கான ஏக்கம், அவர்களின் குடும்பம் மற்றும் நண்பர்களிடம் நிலவுகின்ற சூழ்நிலையில் மாற்றம் கொண்டுவருதல் போன்றவைகள் சித்தரிக்கப்பட்டன.


வேலூர்

## ஹைதராபாத்

ஹைதரபாத்தில் மே 6 - 8 வரை, சகஜ் முகாம் நடத்தப்பட்டது. சுமார் 90 குழந்தைகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக் கொள்வதன் மூலம் அதிக நண்பர்களைச் சேர்த்துக் கொள்ளும் நிகழ்ச்சியுடன் முகாம் தொடங்கியது. பெற்றோர்களிடம் அன்பு செலுத்துதல், ஒழுக்கத்துடன் கூடிய அன்பு போன்றவைகளை அடிப்படையாக கொண்ட பல்வேறு செயல்பாடுகளை நடத்த, குழந்தைகள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். மைதானத்தில் 2 மணி நேரம் விளையாடிய பின்னர், 'மற்றொரு பரிணாமம்' என்ற நிகழ்ச்சி தொடர்ந்தது. இதில் குழந்தைகள், ஒரு படத்தின் ஒரு பகுதியினை மட்டும் பார்த்து அது என்ன படம் எனக் கண்டறிய வேண்டும். இரண்டாம் நாள், 'பெற்றோர்கள் மற்றும் நண்பர்கள்' நிகழ்ச்சியுடன் தொடங்கியது. குழந்தைகள் அவர்களின் பெற்றோரை எந்த அளவிற்குப் புரிந்து வைத்துள்ளனர் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முதுநிலை குழுவினரை அப்யாசிகளாக தயார் செய்வதற்கு விளக்கங்கள் அளிப்பதற்காக, சகோ.ஆனந்துடன் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. தியானம் எவ்வாறு மனிதத் தன்மையைத் தூண்டுகிறது என்பது குறித்து, சகோ.ஸ்ரீனிவாஸ் விளக்கினார். குழந்தைகளுக்கு, 'என் மாஸ்டர்' புத்தகத்தின் பிரதி ஒன்று வழங்கப்பட்டது. சகோதரி ருசிதாவின் நடன நிகழ்ச்சியுடன் முகாம் நிறைவு பெற்றது.


ஹைதராபாத்

## ரெய்ச்சூர்

சகோதரிகள் ஜி.லக்ஷ்மி மற்றும் நாகவேணி ஆகியோரால், ஏப்ரல் 14 -16 வரை, மூன்று நாள் முகாம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் 45 மாணவர்கள் கலந்து கொண்டனர். இறைவனும் மாஸ்டரும், ஆரோக்கியமான வாழ்வு மற்றும் நல்லொழுக்கம் போன்ற விஷயங்கள், சிறு சம்பவங்கள் மூலமாகவும், கதைகள் மூலமாகவும் மாணவர்களுக்கு விளக்கப்பட்டன. பிற்பகல், இந்த தலைப்புகளின் அடிப்படையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதிநாள் அன்று, டாக்டர் பாலசுப்ரமணியம் மற்றும் சகோதரி.அன்னபூர்ணா ஆகியோர், ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் மற்றும் நன்னடத்தை ஆகியவை, ஆரோக்கியமாக வாழ எவ்வாறு உதவிபுரிகின்றன என்று விளக்கினர். ஏப்ரல் 17 அன்று, ஞாயிறு சத்சங்கத்திற்குப்பின்னர், மாணவர்களின் பெற்றோர்கள் அழைக்கப்பட்டு, இந்த நிகழ்ச்சியின் நோக்கம் குறித்து விளக்கிக் கூறப்பட்டது. அவர்களுக்கு நம் மாஸ்டர், மிஷன் மற்றும் பயிற்சிமுறைபற்றியும் எடுத்துக்கூறப்பட்டது. இந்த பயிற்சியில் தாங்கள் பெற்ற அனுபவங்கள் பற்றி குழந்தைகள் பேசினார்கள். மிஷனின் புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டன. சிறு துண்டு பிரசுரங்கள் பெற்றோர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. சிலர் பயிற்சியில் சேருவதற்கு தங்களது ஆர்வத்தினை வெளிப்படுத்தினர்.


ராய்ச்சூர்

## பூஜ், குஜராத்

பூஜ் மையத்தில், 6-12 வயது குழந்தைகளுக்காக, மே 23-28 வரை முகாம் ஒன்று நடத்தப்பட்டது. 72 குழந்தைகள், வயதின் அடிப்படையில் 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். திறமையினை வெளிப்படுத்துதல் மற்றும் நன்னெறி ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதி நாள் அன்று, நிகழ்ச்சிகளின் விபரங்களைத் தொகுத்துக் கூறுவதற்காகவும், மிஷன் மற்றும் பயிற்சிமுறை குறித்து அறிமுகம் செய்யவும் அனைத்து பெற்றோர்களும் அழைக்கப்பட்டனர். 40க்கும் அதிகமான பெற்றோர்கள் கலந்து கொண்டு, குழந்தைகளை உற்சாகப்படுத்தினர். உள்ளூர் தொலைக்காட்சியில், கோடை முகாம் பற்றிய செய்தி ஒளிபரப்பப்பட்டது. மாஸ்டரின் அருளாலும், கிட்டத்தட்ட 24 தன்னார்வத் தொண்டர்களின் உதவியினாலும், இதய பூர்வமாக பணி செய்த சில சிறுவர்களாலும் நிகழ்ச்சி வெற்றிகரமாக அமைந்தது.



புஜ்

ஜூலை 2011 மலர் 4 இதழ் 4

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## பாஹ்ரைச் மையம், உத்திரப்பிரதேசம்

பாஹ்ரைச், மிகவேகமாக வளர்ந்து வரும் SRCMன் ஒரு மையம். இது நேப்பால் எல்லைக்கு அருகில், லக்னௌவிற்கு வடகிழக்கில் 125கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. உத்தரபிரதேசத்தின் மற்ற மாவட்டங்களுடன் சாலை மூலம் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில் மிஷனின் ஒருங்கிணைக்கும் மையமாகவும் இது உள்ளது. ஆசிரமத்திற்கான இடம், பாஹ்ரைச்சிலிருந்து சுமார் 6கி.மீ தொலைவில், கிட்டத்தட்ட 2 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. ஜூன் 12ம் தேதி, ஆசிரமத்திற்கான பூமி பூஜை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில், கோரக்பூர் மையத்தின் பிரிபெக்ட்களான, சகோ. நர்சிங் மற்றும் சகோ. விஜய்சங்கர் ஆகியவர்களுடன், சுமார் 100 அப்யாசிகள் பங்கேற்றனர். கோண்டா மையத்தின் பிரிபெக்ட் சகோ. பத்ரிபிரசாத்சிங், தன்னுரையில், ஆசிரமமானது ஆத்மாவின் இல்லம் ஆகும், அங்குதான் தன் வாழ்தலை அது ஏற்றுக்கொள்கிறது என்று கூறினார். மக்கள், உலகம் சார்ந்த விஷயங்களைப் பெற கோவிலுக்குப் போகிறார்கள். ஆனால் ஆசிரமத்தில், நாம் நம் அகத்தைப்பற்றி அறிய, உலக விஷயங்களை இழக்கிறோம்.

## வார இறுதி நிகழ்ச்சி, நாற்றம்பள்ளி, தமிழ்நாடு



மே 21 மற்றும் 22ம் தேதி, நாற்றம்பள்ளி ஆசிரமத்தில், வேலூர் மையத்தைச் சேர்ந்த 55 அப்யாசிகளுக்காக, வாழ்க்கையின் வழிமுறையாக சகஜ மார்க்கம் என்பதைப்பற்றிய ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சகோ. பரதராஜனின் துவக்க உரையை அடுத்து, சாதனாவின் முக்கியத்துவம் பற்றிய ஒரு கருத்துரை இடம் பெற்றது. அப்யாசிகள், பயிற்சியின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய தங்களது எண்ணங்களையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். ஒரு வீடியோமூலம், சகஜ மார்க்கத்தைப்பற்றிய சந்தேகங்களை, மாஸ்டர் தெளிவாக்கியதுதான், நிகழ்ச்சியின் சிறப்பு அம்சம் ஆகும். குழுக்கலந்துரையாடல்களும், வீடியோ படங்களும், சகஜ மார்க்கப் பயிற்சியின் பல்வேறு பகுதிகளையும் வலியுறுத்த உதவின. சகோ. பாலசுப்ரமணியத்தின் சகோதரத்துவத்தைப் பற்றிய உரையும், மற்றும் ஒரு ஆழ்ந்த சிந்தனை வேளையும், வாழ்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் சகஜ மார்க்கத்தைக் கொண்டு வரவேண்டியதன் அவசியத்தைக் கோடிட்டுக்காட்டின.

## கதைகளிலிருந்து கற்றுக் கொள்ளுதல், KGF தெற்கு கர்நாடகா

பெங்களூரிலிருந்து வந்த, பதிப்பீட்டு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களது குழுவினரால், KGF, கோலார், மற்றும் முல்பாகலைச் சேர்ந்த சுமார் 30 அப்யாசிகளுக்கு, ஒரு நிகழ்ச்சி நடத்தபட்டது. மிஷனின் புத்தகங்களைப் படிப்பது சாதனாவின் ஒரு முக்கிய அம்சம் என்று ஒரு கருத்துரையில் தெரிவிக்கப்பட்டது. அறிவைப் பெறவும், நிரந்தர நினைவில் இருக்கவும், மாஸ்டரின் புத்தகங்களை, தினசரி வழக்கமாக, குறிக்கோளோடும், கவனமாகவும், திரும்பத்திரும்பப் படிக்கவேண்டியதன் முக்கியத்துவமும் கூறப்பட்டது. அப்யாசிகள், ஆங்கிலம், தமிழ், கன்னடம் மற்றும் தெலுங்கு போன்றவற்றில், தங்கள் விருப்பமான மொழியில் கதைகளைப் படிப்பதுடன் நிகழ்ச்சி தொடர்ந்தது. மாஸ்டரால் கூறப்பட்ட கதைகளும் வழங்கப்பட்டு, அவை ஒவ்வொன்றின் பின் உள்ள நல்லொழுக்க நீதிகள் கலந்துரையாடப்பட்டன.

ஒருங்கிணைப்பாளர்கள், கலந்துரையாடலை ஆர்வமிக்கதாகவும், படிப்பினை ஊட்டும் வண்ணமும் நடத்தினர். அதனால் கவரப்பட்ட அப்யாசிகள், நிகழ்ச்சிக்குப்பின், மிஷன் புத்தகங்களை வாங்கி, தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.



## உலக சுற்றுச்சூழல் தினம், ஜாம்நகர்

ஜூன் 5ம் தேதி, ஜாம்நகர் ஆசிரமத்தில், எல்லா தன்னார்வத் தொண்டர்களும், குழந்தைகளும் ஆர்வமுடன் பங்கேற்ற, உலக சுற்றுச் சூழல் தினம் கொண்டாடப்பட்டது. சகோ. சச்சின் வியாஸ் அவர்களின் வரவேற்புரையுடன் துவக்கப்பட்ட நிகழ்ச்சி, ஒரு குருவியின் கூடு தயாரிப்பதுடன் தொடர்ந்தது. பறவைஇயல் நிபுணரான சகோ. அர்பித் தேவ்மூரதி, குருவியின் கூட்டை எவ்வாறு பயன்படுத்துவது, பறவைகளுக்கு எவ்வாறு உணவளிப்பது, ஒரு மரத்தை நடுவது போன்ற பல விஷயங்களை விளக்கினார். குழந்தைகளுக்கு, மரத்தினாலான ஒரு குருவிக்கூடு, பறவை உணவு, பறவை உணவு அளிப்பது, மற்றும் ஒரு கொடி பரிசாக அளிக்கப்பட்டன. அவை அனைத்தையும் சிறந்த முறையில் பயன்படுத்தி, நகர்புறத்தில், மேலும் அதிகமான பறவைகளை எவ்வாறு கவருவது என்றும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது.

## நெஞ்சோடு நெஞ்சம், ராய்பூர், சத்திஸ்கர்

ராய்பூர் யோகாசிரமத்தில், ஏப்ரல் 24ம் தேதி அன்று, ஞாயிறு சத்சங்கத்திற்குப்பின், 37 அப்யாசிகள் பங்கேற்ற, நெஞ்சோடு நெஞ்சம் என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. அவர்கள் 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைப்பு கொடுக்கப்பட்டது. சகோதரிகள், தங்கள் குழுவுக்குக் கொடுக்கப்பட்ட பொருள் மீது கவனத்துடனும் உற்சாகத்துடனும் ஆழ்ந்து யோசித்தனர். பின் அக்குழுவின் தலைவர், அக்கருத்துக்களைத் தொகுத்தளித்தார். SISTER என்ற வார்த்தையின் எழுத்துக்களை மிக அழகான முறைகளில் விவரித்தனர். மேலும், அநேக சகோதரிகள், தங்களின் பொருள் சார்ந்த மற்றும் ஆன்மீக வாழ்க்கை இரண்டையும் சமநிலைப்படுத்த ஏதுவாக, சகஜ மார்க்கத்தின் பத்து நியமங்களைக் கடைப்பிடிக்கத் தாங்கள் முயற்சி செய்யப் போவதாகவும் கூறினர். மேலும் பலர் இம்முறையினால் பயனடைய அவர்கள் ஊக்கமளித்து வருகின்றனர். அவர்கள் நேர்மறையாகவே சிந்திக்கின்றனர். வாழ்க்கையின் கஷ்டங்களை அவர்களால் சமாளிக்க முடிகிறது. மேலும், சகஜ மார்க்கத்தில் சேர்ந்தபின், தங்கள் குழந்தைகளின் நடத்தையில் மாறுதல்களைக் காண்பதாக பல சகோதரிகள் நம்புகின்றனர். குழந்தைகளும் சிரத்தையுடன் படிக்க ஆரம்பித்துள்ளனர். மாஸ்டரை நேசிக்கின்றனர். ஆசிரம நிகழ்ச்சிகளிலும் உற்சாகமாகப் பங்கேற்கின்றனர்.

தங்கள் பெற்றோர் சகஜ மார்க்கத்துடன் தொடர்பு கொண்டிருப்பதைப் பற்றிப் பெருமை கொள்கிறார்கள். தங்களுக்குப் 18 வயதாகி, அப்யாசம் துவங்குவதற்கு ஆர்வமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சில சகோதரிகள், தங்கள் உணர்வுகளைக் கவிதையாக வெளிப்படுத்தினர். சிலர், மாஸ்டருடன் தங்களுக்கு உள்ள தொடர்பிலிருந்து சில உதாரணங்களைக் கூறினர். மாஸ்டர் மீதான தனது நம்பிக்கை, தன் தீராத நோயை வெல்ல எவ்வாறு உதவியது என ஒரு சகோதரி கூறினார். இறுதியாக, உருகும் நெஞ்சங்களுடனும், பனிக்கும் கண்களுடனும் மாஸ்டரை நினைவு கூர்ந்து, தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க இத்தகைய அவை ஒன்றை ஏற்பாடு செய்த பிரிபெக்ட் சகோதரி ரஜனி தத்தாவிற்கு நன்றி கூறினர். புதுப்பிக்கப்பட்ட அன்பு மற்றும் பக்தியுடன், இந்த நெஞ்சோடு நெஞ்சம் நிகழ்ச்சி முடிவடைந்தது.

# மதுரை ஆசிரமம்








SRCM ன் மதுரை மையம், 1975ம் வருடம், தெப்பக்குளத்திலுள்ள சகோ. தஸ்மா சுவாமியின் இல்லத்தில், சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டது. இம்மையம், பாபூஜி மஹராஜின் புனித பிரசன்னத்தில், அவரது 78ம் பிறந்த நாள் விழாவைக்கொண்டாடும் பேறு பெற்றது. அவ்விழாவில் சுமார் 800 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அச்சந்தர்ப்பத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக விழாமலர் வெளியிடப்பட்டது.

1992ம் வருடம் ஏப்ரல் 11 மற்றும் 12ம் தேதிகளில், மதுரை மையத்தின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. அப்பொழுது பேசிய மாஸ்டர், கடனே என்று ஒருமணி நேரம் தியானத்தில் அமர்வது ஒரு பணியே இல்லை எனவும், இலக்கை அடையும் வண்ணம் ஒருமுகப்படுத்தப்பட்ட தியானமே சிறந்தது எனவும், நம் பண்பாட்டு பாரம்பரியத்தில் தியானத்தை ஒரு நிரந்தர அம்சமாகக் கைகொள்வதின் அவசியத்தையும் வலியுறுத்தினார். இவ்விழாவிற்குப்பின், மதுரை மையம் மாரியம்மன் தெப்பக்குளத்தின் மேற்கு கரையில் அமைந்துள்ள, Dr. கோகுல்நாத் பிரேம்சந்த் என்ற சகோதரர் இல்லத்திற்கு மாற்றப்பட்டது.

## மதுரை ஆசிரமத்தின் துவக்கம்

மதுரை மையத்தின் அப்யாசிகள், ஆசிரமம் அமைக்கத் திட்டமிட்டு, மதுரை பேருந்து மற்றும் புகைவண்டி நிலையங்களிலிருந்து சுமார் 11 கி.மீ. தொலைவிலுள்ள, அழகர் கோயில் ரோடு, சுந்தரராஜன் பட்டியில் 1992-94ம் வருடம், மிஷனுக்காகவும், மற்றும் பொருள் அளித்த அப்யாசிகளுக்குள் பகிர்ந்துகொள்ளவும், சுமார் 2.87 ஏக்கர் நிலம் வாங்கினர். மாஸ்டர் அவ்விடத்திற்கு "ஸ்ரீ ராம் சந்திர புரம்" எனப்பெயரிட்டர். பின்னர், மாஸ்டர் அளித்த உதவித்தொகை மூலமும், நிலம் வாங்கப்பட்டு, மொத்தம் 4ஏக்கர் 37 செண்ட் என்ற அளவில் விரிவாக்கமடைந்தது.

அங்கு ஓலை வேயப்பட்ட குடிலில், 1995ம் வருடம் முதல், முறையாக ஞாயிறு சத்சங்கம் நடத்தப்பட்டு வந்தது. பிறகு, 1997ம் வருடம் செப்டம்பர் 22ம் தேதி, மாஸ்டர் ஒரு நிலையான கட்டிடத்தைத் திறந்து வைத்து, அதற்கு 'Master's Chamber' எனப் பெயரிட்டார். அவர் "சாதனா நிலையம்" எனப்படும் தியானக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார். 2004ம் வருடம் நவம்பர் 17ம் தேதி, 10800 சதுர அடி பரப்பளவுள்ள தியானக்கூடத்தை திறந்து வைத்தார். தியானக்கூடத்தின் மேடையில் வைக்கப்பட்டிருந்த, மாஸ்டரின் ஆளுயர அழகான புகைப்படம் எல்லோர் கண்களையும் ஈர்த்தது. இக்கூடத்தில் பாதிஅளவு, நிரந்திர முறையில் கட்டப்பட்டது. இதில் சுமார் 1500 அப்யாசிகள் அமர்ந்து கொள்ளலாம். இக்கூடத்தை உருவாக்க, மணப்பாக்கம் பாபூஜி நினைவு ஆசிரமத்தின் பழைய விடுதிகளின் கட்டிடதளவாடங்கள், மாஸ்டரால் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டன.

இக்கூடத்தைத் தவிர, விடுதி, உணவகம், சமையலறை, சாப்பாட்டுக்கூடம், குழந்தைகளின் செயல்பாடுகளுக்கான இடம் மற்றும் வாசக சாலை ஆகியவையும் உள்ளன. 2009ம் வருடம், குழந்தைகளுக்கான விளையாட்டுத்திடலும், அதற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களும், படிப்பகமும் அமைக்கப்பட்டன.

கடந்த ஆறு வருட காலமாக SMSFன் பொருளுதவியோடு, மாதத்தின் ஒவ்வொரு முதல் ஞாயிறன்று, அப்யாசி மருத்துவர்கள், மற்றும் தொண்டர்கள் மூலம், அப்பகுதியிலுள்ள கிராம மக்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டுவருகிறது.

1992ம் வருட சராசரி 65 அப்யாசிகள் வருகை என்ற நிலையிலிருந்து இம்மையம், சராசரி 450 அப்யாசிகள் வருகை என்ற நிலைக்கு உயர்ந்துள்ளது. முதன்முறை வரும் பொழுது வறண்ட நிலத்தை பார்த்த மாஸ்டர், தனக்கே உரிய பாணியில் இதை பசுமையாக்குங்கள் எனக் கட்டளையிட்டார். அவரின் ஆசியால், இவ்வாசிரமம் இப்பொழுது பசுமையான மரங்களுடன், குளிர்ச்சியாகவும், அமைதியாகவும் புனிதமாகவும் காட்சியளிக்கிறது.









© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.